Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 13 2025

வெள்ளிக்கிழமை 13, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 260 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

அகமதாபாத்தில் பெரும் சோகம்: எயார் இந்திய விமானம்

# வெடித்து சிதறியதில் 242 பேர் பலி

## விமானிக்கு 8,200 மணிநேரம்: துணை விமானிக்கு 1,100 மணிநேர விமானப் பயண அனுபவம்





குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து 242 பேருடன் புறப்பட்ட எயார் இந்தியா விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே மருத்துவ விடுதியின் மீது மோதி விபத்துக்குள்ளானது. AI 171 என்ற எண் கொண்ட விமானம் விபத்துக்குள்ளானது என்று எயார் இந்தியா நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

அகமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிரிட்டன் தலைநகர் லண்டன் நோக்கி வியாழக்கிழமை மதியம் 1.10 மணி அளவில் புறப்பட்ட எயார் இந்தியாவுக்குச் சொந்தமான போயிங் 787-8 ட்ரீம்லைனர் விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளானது. விமான நிலையத்துக்கு அருகே உள்ள மருத்துவ விடுதி பகுதியில் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் 230 பயணிகள், 12 பணியாளர்கள் என 242 பேர் பயணித்தனர். இந்த விபத்தை அடுத்து அப்பகுதியில் இருந்து கரும்புகை பெருமளவில் வெளியாகியது. விபத்து குறித்த தகவல் அறிந்ததும், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், தீ அணைப்புத் துறையினர் உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# ரஷ்யாவுக்கு ரணில் பயணம்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வியாழக்கிழமை (12) காலை ரஷ்யாவிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, முன்னாள் ஜனாதிபதி பல ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

பல சொற்பொழிவுகளில் கலந்து கொள்ளும் ரணில் விக்ரமசிங்க, 22ஆம் திகதி நாடு திரும்புவார் என தெரிவிக்கப்படுகின்றது.

# சி.வி.- சுமந்திரன் உடன்படிக்கை



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரனும் வெள்ளிக்கிழமை (12) மாலையில் நல்லூர் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டனர்.

இந்த உடன்படிக்கை கொழும்பில் உள்ள விக்னேஸ்வரன் இல்லத்தில் கையெழுத்திடப்பட்டது.

உடன்படிக்கையின்படி நல்லூர் பிரதேச சபையில் முதல் இரண்டு வருடங்கள் தவிசாளர் பதவி தமிழ் மக்கள் கூட்டணிக்கும், அடுத்த இரண்டு வருடங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் வழங்கப்படுகின்றது.

இந்த உடன்படிக்கை நல்லூர் பிரதேச சபைக்காக மட்டுமே என தெரிவிக்கப்பட்டாலும், பிற இடங்களில் தமிழ் மக்கள் கூட்டணி இலங்கைத் தமிழரசுக் கட்சியை முழுமையாக ஆதரிக்கும் என்றும் தெரியவந்தது

# திசாநாயக்க இராஜினாமா: ஜகத் வீரசிங்க நியமனம்

**இந்த நியமனத்தை நீதி அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. பதில் ஆணையாளராக நிஷான் தனசிங்க நியமனம்**



சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி பி.திசாநாயக்க, தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை சிறைச்சாலைகள் பதில் ஆணையாளர் நிஷான் தனசிங்கவிடம் வியாழக்கிழமை (12) அன்று கையளித்துள்ளார்.

நிதி மோசடி குற்றச்சாட்டின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அத்துல திலகரத்ன என்பவர், 2025 வெசாக் பண்டிகையை



# கொவிட் திரிபினால் இருவர் மரணம்

**பலவீனமான நோயெதிர்ப்பு சக்தி கொண்டவர்களுக்கும் இது தீவிரமாக இருக்கலாம்**

இலங்கையில் கொவிட் திரிபினால் பாதிக்கப்பட்டு இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக வடமேல் மருத்துவ பீடத்தின் தலைமை மருத்துவ பேராசிரியர் துஷாந்த மெதகெதர தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை குறிப்பிட்டார்.

இலங்கை தொற்று நோயியல் பிரிவு தகவலின் படி, சுவாச நோயாளிகளில் 9% முதல் 13% வரை தற்போது புதிய கொவிட் திரிபினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



# “மின் கட்டண உயர்வால் தொற்றா நோய்கள் அதிகரிக்கும்”

மின்சாரக் கட்டணங்களில் சமீபத்திய 15 சதவீத அதிகரிப்பு நாடு முழுவதும் உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு வழிவகுக்கும் என்று தேசிய நுகர்வோர் முன்னணி (NCF) தலைவர் அசேல சம்பத், எச்சரித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை (12) அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சம்பத், மின்சாரக் கட்டண உயர்வு தவிர்க்க முடியாமல் உணவு உற்பத்தி மற்றும் விநியோகச் செலவுகளைப் பாதிக்கும் என்றும், இதனால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயரும் என்றும் கூறினார்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுடன், பல குடும்பங்கள் சத்தான உணவை வாங்க முடியாமல் தவிக்கும் என்றும், இதனால் மக்களிடையே தொற்றா நோய்கள் மேலும்

தொடர்ச்சி P2

# எலிக்காய்ச்சல் சடுதியாக அதிகரிப்பு

நாடு முழுவதும் எலிக்காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, குருநாகல், கேகாலை, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்தே அதிக நோயாளிகள் பதிவாகியுள்ளதாக தொற்று நோயியல் பிரிவின் வைத்திய நிபுணர் துஷானி தபரேரா தெரிவித்தார்.

இந்த நோய் ஒரு பாக்டீரியாவால், குறிப்பாக, பாலூட்டிகளின் சிறுநீர் வழியாகப் பரவுகிறது. உண்மையில், இந்த பாக்டீரியா எலிகளின் சிறுநீர் அமைப்பில் வாழ்கிறது. எலிகள் தண்ணீர் குடிக்கும்போது, அவற்றின் சிறுநீர் தண்ணீரிலோ அல்லது மண்ணிலோ கலக்கிறது. நாம் அந்த மண் அல்லது தண்ணீரைப் பயன்படுத்தும் போது, மக்களுக்கு இந்த நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.





# டோக் குரங்குகள்–5.17 மில்லியன் குரங்குகள்–1.74 மில்லியன்

## இராட்சத அணில்கள்–, 2.66 மில்லியன் மயில்கள் –4.34 மில்லியன்

வேளாண்மை, கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு சமீபத்தில் நடத்தப்பட்ட தேசிய விலங்கு கணக்கெடுப்பின் முடிவுகளை வியாழக்கிழமை (12) வெளியிட்டது.

அறிக்கையின்படி, நாட்டில் 5.17 மில்லியன் டோக் குரங்குகள், 1.74 மில்லியன் குரங்குகள், 2.66 மில்லியன் இராட்சத அணில்கள் மற்றும் 4.34 மில்லியன் மயில்கள் உள்ளன.

தொடர்ச்சி P2

# யாழ். மாநகர மேயருக்கு மதிவதனியின் பெயர் பரிந்துரை



யாழ். மாநகர சபையின் மேயர் பதவிக்கு விவேகானந்தராஜா மதிவதனியை இலங்கைத் தமிழரசுக் கட்சி பரிந்துரைக்கத் தீர்மானித்துள்ளது என அக்கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க்கிழமை (10) அன்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே சி.வீ.கே.சிவஞானம் இதனைக் குறிப்பிட்டார்.

IFrame மேலும் தெரிவிக்கையில், கட்சி மட்டத்தில் யாழ் மாநகர சபை மேஜர் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

IFrame இதன்போது யாழ் மாநகர சபையின் மேயர் பதவிக்கு விவேகானந்தராஜா மதிவதனியின் பெயரும் யாழ் மாநகர சபையின் துணை மேயர் பதவிக்கு இம்மானுவேல் தயாளனின் பெயரையும் பரிந்துரைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

யாழ் மாநகர சபைக்கான மேயர், பிரதி மேயர் தெரிவுகள் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பித்தப்பை வெடித்ததில் மருத்துவர் உயிரிழந்தார்

**50 ஏழை கண் நோயாளிகளுக்கு உள்விழி லென்ஸ் மாற்று அறுவை சிகிச்சைகளை 13ஆம் திகதி நிபுணர் டாக்டர் துமிந்த சமன்குமார செய்யவிருந்தார்**



வத்துபிட்டிவல ஆதார மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர் ஒருவர், பித்தப்பை வெடித்ததால் திடீரென உயிரிழந்ததாக கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வத்துபிட்டிவல ஆதார மருத்துவமனையின் சிறப்பு கண் அறுவை சிகிச்சை நிபுணரான துமிந்த சமன் குமார என்று வத்துபிட்டிவல ஆதார மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் நயனஜித் பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் வத்துபிட்டிவல மருத்துவமனையில் சிறப்பு கண் அறுவை சிகிச்சை நிபுணராக பணியாற்றி வந்தார்.

இதனையடுத்து, மாரடைப்பு காரணமாக கொழும்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறப்பு மருத்துவர், பைபாஸ் அறுவை சிகிச்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தபோது,

தொடர்ச்சி P2

அகமதாபாத்தில் பெரும் சோகம்: எயார் இந்திய விமானம்

# வெடித்து சிதறியதில் 242 பேர் பலி

இந்த விமானம் அகமதாபாத்தில் இருந்து ஒன்பதரை மணி நேரம் பயணித்து லண்டன் செல்லக்கூடியது என்பதால், விமானத்தில் எரிபொருள் முழுமையாக நிரப்பப்பட்டிருக்கும் என்று கூறப்படுகிறது. விமானம் விபத்துக்குள்ளானதும் தீப்பிடித்தது என்றும், தீ அணைப்பு வாகனங்கள் விரைந்துள்ளன என்றும் தீயணைப்பு அதிகாரி ஜெயேஷ் கடியா தெரிவித்துள்ளார்.

விமானத்தில் 169 இந்தியர்கள் இருந்தனர். 53 பிரிட்டன் நாட்டவர்கள், ஒரு கனேடிய நாட்டவர் மற்றும் ஏழு போர்த்துகீசிய நாட்டவர் இருந்தனர் என எயார் இந்தியா தெரிவித்துள்ளது. 217 பெரியவர்கள், 11 குழந்தைகள், 2 கைக்குழந்தைகள் பயணித்துள்ளனர்.

"புறப்பட்ட சில வினாடிகளுக்குப் பிறகு" 625 அடி (190 மீ) உயரத்தில் விமானத்திலிருந்து கடைசி சமிக்ஞையைப் பெற்றதாக Flightradar24 என்ற கண்காணிப்பு வலைத்தளம் தெரிவித்துள்ளது. விமானம் புறப்பட்ட சில வினாடிகளுக்குப் பிறகு கடைசி சமிக்ஞை பெறப்பட்டதாக ஃபிளைட் ரேடார் தெரிவித்துள்ளது, அப்போது விமானம் 625 அடி உயரத்தில் (விமான நிலைய உயரம் சுமார் 200 அடி) இருந்தது.

இந்த விமானத்தின் விமானிக்கு 8,200 மணிநேர விமானப் பயண அனுபவமும் துணை விமானிக்கு 1,100 மணிநேர விமானப் பயண அனுபவமும் இருந்தது

# காதலியின் ஆபாசத்தை பகிர்ந்த பிக்குவுக்கு சிறை

தன்னுடைய காதலியின் நிர்வாண புகைப்படங்களை, இணையத்தளத்தில் பதிவேற்றிய குற்றச்சாட்டை ஒத்துக்கொண்ட பௌத்த துறவிக்கு இலகு வேலையுடன் கூறிய ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு துறவிக்கே, கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி, இந்த தண்டனையை வியாழக்கிழமை (12) விதித்தார்.

அவர் தனது காதலியிடமிருந்து பிரிந்த பிறகு அவர் நெருக்கமாக இருந்த வீடியோக்களை ஒன்லைனில் வெளியிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்காக, பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 2,500 அபராதமும் ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடும் வழங்குமாறும் நீதவான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

அபராதம் செலுத்தப்படாவிட்டால், அவர் மேலும் மூன்று மாத சிறைத்தண்டனையைக் கடுமையாக அனுபவிக்க வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டார்.

வாட்ஸ்அப்பில் ஆபாச காணொளிகளை வெளியிட்ட குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகு அவர் இந்த தண்டனையை விதித்தார்.

குற்றப் புலனாய்வுத் துறையின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்த பின்னர் நீதிபதி இந்த தண்டனையை விதித்தார்.

சந்தேக நபரான துறவியும் முறைப்பாட்டாளரும் வாட்ஸ்அப் மூலம் சந்தித்ததாக நீதிமன்றத்தில் ஆதாரங்களை முன்வைத்த சிஐடி. அவளை அடையாளம் கண்ட பிறகு, துறவி முறைப்பாட்டாளரை அனுராதபுரத்தில் யாத்திரை செய்ய அழைத்தார்.

தனது கணவனுடன் பல முறை அனுராதபுரத்துக்கு யாத்திரை மேற்கொண்ட முறைப்பாட்டாளர், சந்தேக நபரான துறவியின் விஹாரையில் உள்ள கபனாக்களில் தனது கணவருடன் தங்கியிருந்தார்,

விஹாரைகளில் கபனாக்கள் உள்ளதா என்று முறைப்பாட்டாளரிடம் நீதவான் வினவினார்.

இதற்கு பதிலளித்த சிஐடி, சந்தேகத்திற்குரிய துறவி தங்குமிட வசதிகளை வழங்கும் அறைகளை கபனாக்கள் என்று குறிப்பிட்டதாகக் கூறியது.

முறைப்பாட்டாளர் பின்னர் சந்தேகத்திற்குரிய துறவியைத் தனது வீட்டில் யாத்திரை செய்ய அழைத்தார், மேலும் அழைப்புக்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு, அவரது கணவர் வேலைக்கு வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

அதன் பிறகு, இருவருக்கும் இடையே ஒரு காதல் உறவு இருந்ததாகவும், அவ்வப்போது வீடு மற்றும் ஹோட்டல்களில் தங்கிருந்துள்ளனர். மேலும் அவர்கள் பிரிந்த பிறகு, அவர் தனது கணவருக்கு வாட்ஸ்அப் மூலம் தொடர்புடைய வீடியோக்களை அனுப்பியுள்ளார்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர், தனக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டால் குற்றத்தை ஒப்புக்கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

இருவரின் சம்மதத்துடன் தொடர்பு இருப்பதாகவும், முறைப்பாட்டாளரின் கணவருக்கு இந்த விவகாரம் தெரியும் என்றும் கூறினார்.

முறைப்பாட்டாளரின் கணவருக்கு எதுவும் தெரியாது என்று வாக்குமூலம் அளித்ததாக சிஐடி கூறியது.

தொடர்புடைய வீடியோக்களைப் பார்த்த பிறகு தனது வாழ்க்கை துயரமானது என்று கணவர் கூறியதாகவும் கூறப்பட்டது.

இரு தரப்பினரின் பரிசீலித்த பிரதான நீதவான், சந்தேக நபரான துறவி, புகார் அளிக்கப்பட்டால் குற்றத்தை ஒப்புக்கொள்வதாக நீதிமன்றத்தில் தெரிவித்ததால், அவரை ஐந்து லட்சம் ரூபாய் சொந்த ஜாமீனில் விடுவிக்க உத்தரவிட்டார்.

தொடர்புடைய பிணையைத் தாக்கல் செய்ய முடியாத சந்தேக நபரான துறவி, மூன்று நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் ஒரு உத்தரவாதத்தை முன்வைத்து விடுவிக்கப்பட்டார்.

பின்னர் வழக்கு மீண்டும் அழைக்கப்பட்டது., மேலும் இணையத்தில் ஆபாச வீடியோக்களை வெளியிட்டதற்காக மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் சிஐடி வழக்குப் பதிவு செய்தது. வழக்கைப் பரிசீலித்த நீதவான், குற்றம் சாட்டப்பட்டவருக்கு லேசான வேலையுடன் கூடிய ஆறு மாத சிறைத்தண்டனை விதித்தார்.

# "பேக்கரி பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது"

மின் கட்டண உயர்வுக்கு ஏற்ப ரொட்டி உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வியாழக்கிழமை (12) அன்று அளித்துள்ள செவ்வியொன்றின்பேதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், உற்பத்திச் செலவில் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சேர்க்கப்பட்டாலும், தற்போது பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என்றும், அத்தகைய விலைகளை அதிகரிக்க வேண்டாம் என்று பேக்கரி உரிமையாளர்களிடம் அவர் கேட்டுக்கொள்கிறார் என்றும் ஜெயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

பேக்கரி உற்பத்தியாளர்கள் இதுபோன்ற நேரங்களில் பொதுமக்களுக்குத் தெரியாமல் ரகசியமாக மற்ற பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிப்பதாகவும், ரொட்டியின் விலை அதிகரித்தால், விலை அதிகரிக்கப்பட்டதாகக் கருதப்படுவதால் ரொட்டியின் விலை தற்போதைய விலையிலேயே இருக்கும் என்றும் நுகர்வோர் கூறுகின்றனர்.

# கூட்டாக நிர்வாகங்களை அமைக்க உடன்பாடு




ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு (NPP) பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சி அமைப்புகளில் கூட்டாக நிர்வாகங்களை அமைப்பதற்கான உடன்பாட்டை எட்டியுள்ளதாக நான்கு எதிர்க்கட்சிகள், அதாவது ஐக்கிய மக்கள் சக்தி (SJB), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP) மற்றும் மக்கள் கூட்டணி (PA) இன்று அறிவித்தன.

SJB தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், மக்கள் கூட்டணி பொதுச் செயலாளர் லசந்த அழகியவண்ண மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள ஆகியோர் இணைந்து இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அக்குரணை, கடுகண்ணாவை, குளியாப்பிட்டிய மற்றும் உடுபத்தாவ பிரதேச சபைகளின் நிர்வாகங்களை ஏற்கனவே அமைத்து விட்டதாகக் கட்சி மூத்த உறுப்பினர்கள் அறிவித்தனர்.

"நாங்கள் இன்னும் அதிகமான உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகங்களைப் பெறுவோம்," என்று அத்தநாயக்க கூறினார்.

உள்ளாட்சி அமைப்புகள் மூலம் மக்களுக்குத் தரமான சேவையை உறுதி செய்வதில் கட்சிகளின் கூட்டு முயற்சி விரிவுபடுத்தப்படும் என்று அழகியவண்ண கூறினார்.

மரக்கிளை விழுந்ததில்

# ஒருவர் மரணம்; 17 மாணவர்கள் காயம்



பலாங்கொடை ரஜவக மகா வித்தியாலயத்தில் உள்ள கட்டிடமொன்றின் மீது அருகிலிருந்த மரத்தின் கிளை விழுந்ததில் ஒரு மாணவன் உயிரிழந்துள்ளதாகவும், 17 பேர் காயமடைந்து பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பலாங்கொடை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மழையுடன் கூடிய பலத்த காற்று காரணமாக மரம் முறிந்து விழுந்துள்ளது.

12 மற்றும் 13 ஆம் வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# டோக் குரங்குகள் –5.17 மில்லியன் குரங்குகள்–1.74 மில்லியன்

வனவிலங்கு மேலாண்மை, சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் விவசாய திட்டமிடல் ஆகியவற்றை ஆதரிப்பதற்காக இந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர், ஏனெனில், இந்த இனங்கள் பெரும்பாலும் மனித குடியிருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுடன் தொடர்பு கொள்கின்றன.

புதுப்பிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் வரும் மாதங்களில் மிகவும் பயனுள்ள பாதுகாப்பு மற்றும் நிலப் பயன்பாட்டு உத்திகளை வடிவமைக்க அதிகாரிகளுக்கு உதவும் என்று அமைச்சு குறிப்பிட்டது.

மார்ச் மாதம் 15ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட விலங்குகள் கணக்கெடுப்புக்காக 2.7 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டதாக விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

# திசாநாயக்க இராஜினாமா: ஜகத் வீரசிங்க நியமனம்

முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் எழுந்து வரும் சர்ச்சைகளை கருத்தில் கொண்டு காமினி பி. திசாநாயக்க, தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என அறியமுடிகின்றது.

இந்நிலையில், சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் வீரசிங்க சிறைச்சாலைத் துறையின் புதிய ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை நீதி அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

அத்துடன், நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் நிஷான் தனசிங்க பதில் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# பித்தப்பை வெடித்ததில் மருத்துவர் உயிரிழந்தார்

அவரது பித்தப்பை வெடித்து திடீரென இறந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

சடலத்தின் பிரேதப் பரிசோதனை புதன்கிழமை (11) மதியம் நடைபெற்றது.

கடுவல, கொரத்தொட்ட வீதியைச் சேர்ந்த சிறப்பு மருத்துவர் துமிந்த சமன் குமார இறக்கும் போது, அவருக்கு 49 வயதாகும். அவர் இரண்டு குழந்தைகளின் தந்தையாவார்.

வத்துபிட்டிவல மருத்துவமனையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட ஐம்பது ஏழை கண் நோயாளிகளுக்கு 13ஆம் திகதி அன்று உள்விழி லென்ஸ் மாற்று அறுவை சிகிச்சைகளை நிபுணர் டாக்டர் துமிந்த சமன் குமார செய்யவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொவிட் திரிபினால் இருவர் மரணம்

இந்த கொவிட் தொற்று மிகக் குறைந்த தீவிரத்தன்மை கொண்டது. இதனால் ஏற்படும் தாக்கம் மிகக் குறைவு. ஆனால் 65 வயதுக்கு மேற்பட்ட நோயாளிகளுக்கும் பலவீனமான நோயெதிர்ப்பு சக்தி கொண்டவர்களுக்கும் இது தீவிரமாக இருக்கலாம்.

இவ்வாறானவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்.

இலங்கையில் இரண்டு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இருவருக்கும் நோய்கள் இருந்தன. அதைத் தவிர, தற்போது எங்களுக்கு எந்த ஆபத்தான நிலைமைகளும் இல்லை, எனவே தேவையற்ற அச்சம் தேவையில்லை. ஆனால் குறிப்பிட்ட தரப்பினர் இது குறித்து விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம் என்றார்.

# "மின் கட்டண உயர்வால் தொற்றா நோய்கள் அதிகரிக்கும்"

அதிகரிக்கும் என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

"அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்," என்று சம்பத் வலியுறுத்தினார், இந்த அதிகரிப்புகளின் சுமைகளைத் தாங்குவதிலிருந்து அப்பாவி நுகர்வோரைப் பாதுகாக்க விலைக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்த அதிகாரிகள் ஏதேனும் திட்டங்களைக் கொண்டிருக்கிறார்களா என்று கேள்வி எழுப்பினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் அளித்த நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் குறித்தும் அவர் அரசாங்கத்தை விமர்சித்தார்.

"ஜனவரி மாதத்தில், மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக, அரசியல் ஆதாயத்திற்காக மட்டுமே அரசாங்கம் மின்சாரக் கட்டணங்களை 20 சதவீதம் குறைத்தது. இந்தக் குறைப்புக்கு எந்த சாத்தியமான நிதி அடிப்படையும் இல்லை, மேலும் இது தவிர்க்க முடியாமல் இலங்கை மின்சார சபையை மேலும் நஷ்டத்தில் தள்ளியது," என்று அவர் குற்றம் சாட்டினார்.

**"நுகர்வோரின் நலனுக்கு முன்னுரிமை அளித்து, வாழ்க்கைச் செலவு உயர்வைத் தணிக்க பயனுள்ள நடவடிக்கைகளைச் செயல்படுத்துமாறு அதிகாரிகளை தேசிய நுகர்வோர் முன்னணி கேட்டுக் கொண்டது**

மின்சார சபையால் ஏற்பட்ட நிதி இழப்புகளுக்கும், சமீபத்திய கட்டண உயர்வு மூலம் பொதுமக்கள் மீது சுமத்தப்பட்ட சிரமங்களுக்கும் இப்போது யார் பொறுப்பேற்க வேண்டும் என்று கேட்டு, அரசாங்கத்திடம் இருந்து பொறுப்புக்கூறலை சம்பத் கோரினார்.

நுகர்வோரின் நலனுக்கு முன்னுரிமை அளித்து, வாழ்க்கைச் செலவு உயர்வைத் தணிக்க பயனுள்ள நடவடிக்கைகளைச் செயல்படுத்துமாறு அதிகாரிகளை தேசிய நுகர்வோர் முன்னணி கேட்டுக் கொண்டது.

# “கால்நடைத் திருட்டைக் கட்டுப்படுத்தவும்”

விஜயரத்தினம் சரவணன்வ

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் அதிகரித்துள்ள கால்நடைத் திருட்டைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் புதன்கிழமை(11) அன்று இடம்பெற்றுளள்து. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

“ வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளிலும் தற்போது கால்நடைத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக மக்கள் எம்மிடம் முறையிடுகின்றனர்.

இவ்வாறான கால்நடைத் திருட்டுக்களால், பல கால்நடை வளர்ப்பாளர்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்ற அவலநிலைகளும் காணப்படுவதாக மக்களால் எம்மிடம் முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடந்த சில நாட்களுக்கு முன்னர் குளவிசுட்டான் பகுதியில் ஒரு கால்நடை வளர்ப்பாளரது இருபதுக்கும் மேற்பட்ட கால்நடைகள் ஒரே இரவில் திருடப்பட்டுள்ளதாகவும் எம்மிடம் தெரிவிக்கப்பட்டது.

எனவே இவ்வாறான கால்நடைத் திருட்டுக்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்” என தெரிவித்தார்.



## வெருகல் படுகொலையின் 39ஆவது நினைவேந்தல்



அ.அச்சுதன்

ஈச்சிலம்பற்று முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை ஏற்றிவந்த அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு 39 வருடங்களாகியும் நீதியும், நிவாரணங்களும் கிடைக்காத நிலையில் குறித்த படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்வு, பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து வியாழக்கிழமை (12) ஏற்பாடு செய்தனர்.

அன்று நாட்டில் நிலவிய யுத்த சூழல் காரணமாக வெருகல் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஈச்சிலம்பற்று, பூமரத்தடிச்சேனை மற்றும் மாவடிச்சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்தார்கள். இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் அரசாங்கம் சேருவில பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக வழங்கி வந்தது.

இந்நிலையில் 1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி அகதிகளுக்கான நிவாரணங்களை வண்டில்களைக் கொண்டுவந்து ஏற்றிச் செல்லுமாறு அப்போது மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த வர்ணசூரியவினால் மக்களுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், முகாம்களுக்குப் பொறுப்பான அரச அதிகாரிகள் மூவர் உட்பட 21பேர் மாட்டு வண்டில்களுடன் சேருவில நோக்கிச் சென்றார்கள். அங்கிருந்து நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டு ஈச்சிலம்பற்று நோக்கி வரும்போது மகிந்தபுரவில் வைத்து ஆயுதம் தாங்கிய நபர்களினால் அவர்கள் வழிமறிக்கப்பட்டு பிரதான வீதியில் இருந்து 50 மீட்டர் தூரம் அழைத்துச் சென்று முழங்காலில் இருக்க வைத்து பின்னர் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இதில் மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21பேர் படுகொலை செய்யப்பட்டதோடு மூன்று பேர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் உயிர் தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரோரி – செந்தில் சந்திப்பு

ஜெனீவாவில்,மனித உரிமை ஆணையத்தின் ஆசிய பசிபிக் பிரிவின் தலைவர் ரோரி முங்கோவனை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் மனித உரிமை ஆணையத்தின் தலைமை காரியாலயத்தில் சந்தித்து, கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இதன் போது,பெருந்தோட்ட சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் பெருந்தோட்ட சமூகத்திற்கான காணி உரிமை மற்றும் அவர்களின் சம்பள உயர்வு பிரச்சினை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இப்பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வை பெற்றுத் தருவதாக ரோரி முங்கோவன், செந்தில் தொண்டமானிடம் உறுதி அளித்தார்.



## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 76 பேர் கைது

மே 26 முதல் ஜூன் 07 வரை கடற்படை நடத்திய தேடுதல் நடவடிக்கைகளின் போது, பல்வேறு இடங்களில் பல்வேறு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளின் மூலம், இந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட 20 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் கடைக்காடு மற்றும் புதுமாத்தளன், திருகோணமலையின் கல்லடிச்சேனை,அடுக்குபாடு, கோட்பே,பொடுவகட்டு, குச்சவெளி மற்றும் சல்பே ஆறு மற்றும் மட்டக்களப்பின் பாலமின்மடு ஆகிய கடற்கரை மற்றும் கடல் பகுதிகளை உள்ளடக்கி மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள், மின் விளக்குகளைப் பயன்படுத்தி இரவில் சட்டவிரோதரமாக சுழியோடி கடலட்டைகளைப் பிடித்த 76 சந்தேக நபர்களுடன் 20 டிங்கிகள் மற்றும் 17 தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.



மேலும், இந்த நடவடிக்கைகளின் போது, கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட சந்தேக நபர்கள், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்பிடி படகுகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, ஈச்சிலம்பத்து, முல்லைத்தீவு, குச்சவெளி, கோட்பே மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள மீன்வள மற்றும் நீர்வளத் துறை அலுவலகங்களுக்கு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டன.

## சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 10 ஆண்டுகள் சிறை

கல்கிசை பகுதியில் 16 வயதான சிறுமியை தனது முச்சக்கர வண்டியில் ஏற்றி பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய இரண்டு குழந்தைகளின் தந்தையான 37 வயதுடைய ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க புதன்கிழமை (11) அன்று 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும், ரூ.30,000 அபராதமும் விதித்துள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.300,000 இழப்பீடு வழங்கவும், அபராதம் மற்றும் இழப்பீட்டை செலுத்தத் தவறினால் குற்றவாளிக்கு கூடுதலாக இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பின்னர், தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பு நீதிமன்றத்தின் பிரதிவாதி, இப்போது இரண்டு மைனர் குழந்தைகளின் தந்தையாக இருப்பதால், சிறியதாக தண்டனையை விதிக்குமாறு தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பு நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் கோரப்பட்டது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரியதால் இவ்வளவு சிறிய தண்டனையை விதிக்க நீதிமன்றத்திற்கு சட்டப்பூர்வ அதிகாரம் இல்லை என்றும், அதிகபட்ச தண்டனையை சட்டத்தால் விதிக்க முடியும் என்றும் நீதிபதி சுட்டிக்காட்டினார்.

பாதிக்கப்பட்ட சிறுமி தனது தாயுடன் பிரதிவாதியின் முச்சக்கர வண்டியில் பயணம் செய்தபோது, அவர் தனது மொபைல் போன் எண்ணைக் கொடுத்து, பின்னர் அவளை ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

தேசிய அடையாள அட்டை இல்லாத ஒரு மைனர் என்பதை உணர்ந்த ஹோட்டல் நிர்வாகம், அவளுக்கு தங்குமிடம் வழங்க மறுத்தது. இந்நிலையில், ஆள் நடமாட்டம் இல்லாத இடத்திற்கு அழைத்துச் சென்று பாலியல் வன்புனர்வுக்குட்படுத்தியதாக புகாரில் கூறப்பட்டுள்ளது.

## 35ஆவது வருட ஞாபகார்த்த நிகழ்வு

பாறுக் ஷிஹான்

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சுமார் 600 பொலிஸார் படுகொலை செய்யப்பட்டு 35 ஆண்டுகள் நிறைவடைந்ததை அனுஷ்டிக்கும் நிகழ்வு அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் அமைந்துள்ள ரணவிரு ஞாபகார்த்த நினைவு தூபியில் புதன்கிழமை(11) நடைபெற்றது.

1990 ஜூன் 11 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட 600 பொலிஸ் அதிகாரிகளின் நினைவாக அமைதி என்ற பெயரில் இம்மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வின் போது கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தர உள்ளிட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள், ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வின் முக்கிய அம்சமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளினால் 1990 ஆம் ஆண்டு கடத்திக் கொல்லப்பட்ட பொலிஸார் உட்பட யுத்தத்தினால் உயிர் நீத்த மற்றும் கடந்த கால யுத்தம் உள்ளிட்ட இதர காரணங்களால் மரணமடைந்த பொலிஸாரின் குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடுகள் இதன் போது முன்னெடுக்கப்பட்டன.

இது தவிர நிகழ்வின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவினால் பொலிஸ் கொடி அரை கம்பத்தில் ஏற்றப்பட்டதுடன் உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.









## ஜனாதிபதியின் ஜேர்மன் விஜயம்

ஜேர்மனியக் கூட்டாட்சி குடியரசிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு, ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியரினால் (Frank-Walter Steinmeier) புதன்கிழமை (11) அன்று அமோக வரவேற்பளிக்கப்பட்டது.





# இந்தியாவுக்கு இருமல் பிடித்தால், நமக்கு காசநோய் வரும்

இந்தியாவில் ஒவ்வொரு நாளும் சுமார் நானூறு கொரோனா நோயாளிகள் கண்டறியப்படுகிறார்கள். இங்கு இலங்கை அதிக ஆபத்தில் உள்ளது. இந்தியா பல நாடுகளுடன் நில எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடு. வங்கதேசம், பாகிஸ்தான், நேபாளம், பூட்டான் மற்றும் சீனா ஆகியவை அவற்றில் அடங்கும். ஆனால், இந்த நாடுகளில் இருந்து இந்தியாவுக்குள் நுழைபவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

வங்கதேசத்திலிருந்து நாசகாரரர்கள் வருவதால், எல்லைக்கு அருகில் இந்தியா மிகவும் எச்சரிக்கையாக உள்ளது. பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை, பெரும்பாலான நேபாள மக்கள் இந்தியாவுக்குச் செல்வதில்லை. காரணம், அந்த நாட்டு மக்களுக்கு இந்தியாவுக்குச் செல்ல விருப்பமில்லை. பூட்டான் மக்கள் எளிதில் வெளிநாடுகளுக்குச் செல்வதில்லை. இதற்கு பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக, வெளிநாடுகளுக்குச் சென்று வேடிக்கை பார்க்க அந்த மக்களிடம் பணம் இல்லை. இரண்டாவதாக, அவர்களிடம் பணம் இருந்தாலும், பூட்டான் தனது மக்களைத் தனது நாட்டை விட்டு வெளியேற அனுமதிப்பது அரிது.

இந்திய எல்லை தொடர்பாக சீனா மிகவும் விசாரிக்கும் கொள்கையைப் பின்பற்றுகிறது. இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அந்தப் பிரச்சினைகளுக்கு ராஜதந்திர பதில்கள் தேவை. அந்த பதில்களைப் பெற எடுக்கும் நேரம் காரணமாக, மிகக் குறைவான மக்களே இந்தியாவிலிருந்து சீனாவிற்கும் சீனாவிலிருந்து இந்தியாவிற்கும் வருகிறார்கள்.

ஆனால், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவு அப்படி இல்லை. இந்தியர்கள் தொடர்ந்து இலங்கைக்கு வருகிறார்கள். இலங்கையர்கள் தொடர்ந்து இந்தியாவிற்குச் செல்கிறார்கள். எனவே, இந்தியாவில் இருந்து வரும் எந்தவொரு நோயும் மிகக் குறுகிய காலத்தில் இலங்கையை அடைகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

1970களில், இந்தியாவில் கொலரா பரவியது. மிகக் குறுகிய காலத்தில்,

அந்த நோய் இலங்கைக்கும் பரவியது. அந்த நேரத்தில், மருத்துவம் இன்று போல் முன்னேறவில்லை. மேலும், நமது நாட்டின் சுகாதார வளங்கள் பற்றாக்குறையாக இருந்தன. இதன் காரணமாக, இலங்கையில் கொலரா நோயாளிகள் அதிக எண்ணிக்கையில் இறந்தனர்.

இந்தியாவிலிருந்து எங்களுக்குப் பல நல்ல விடயங்களும் பல கெட்ட விஷயங்களும் கிடைத்தன. இந்தியாவிலிருந்து புத்த மதத்தையும் பெற்றோம். ஒருவேளை, இந்தியாவிலிருந்து நாம் பெற்ற மிக உயர்ந்த பரிசு மற்றும் மிகப்பெரிய பரிசு புத்த மதம்.

இந்தியாவில் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையின் ஆற்றலையும் இலங்கை உணர்கிறது. அதாவது, இந்தியாவுக்கு சளி பிடித்தால், நமக்கு இருமல் வரும். இந்தியாவுக்கு இருமல் பிடித்தால், நமக்கு காசநோய் வரும்.

நமது அருகிலுள்ள நாடான இந்தியாவில், அதிக மக்கள் தொகை பரிமாற்றம் கொண்ட நாடான இந்தியாவில் கொவிட் வைரஸ் மீண்டும் பரவினால் நாம் கவனமாக இருக்க வேண்டும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்றை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பை தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்து போன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்த தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.

இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே, சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### மின்கம்பம் கூரை மீது விழும் அபாயம்

நோர்வூட் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொகவந்தலாவ, சிங்காரத்தைத் தோட்டத்தில் மின்கம்பமொன்று, தோட்ட குடியிருப்பின் கூரை மீது விழும் அபாய நிலையில் உள்ளதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் கிராம உத்தியோகத்தர் மற்றும் மின்சார சபைக்கு அறிவித்துள்ள போதிலும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை என அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பெரும் ஆபத்து ஏற்படுவதற்கு முன்பு இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எம்.கிருஸ்ணா



பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை – 24

# 1960களில் ஏற்றுமதித் தொழிற்றுறைக் கோளாறுகள்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1960களில் அரசாங்கம் விரிவான இறக்குமதிக் கட்டுப்பாட்டு முறையை உருவாக்கத் தொடங்கியதிலிருந்து, இலங்கையின் பொருளாதார அனுபவத்தின் அடிப்படை அர்த்தத்தைக் கண்டறிவது அவசியம் என்பதை உணர்த்துகின்றது. ஏனெனில் இவ்வாறானதொரு செயற்பாட்டை முன்னெடுக்கும் எந்தவொரு முயற்சியும், எதிர்காலத்தில் இலங்கைக்கு என்ன காத்திருக்கிறது என்பதைப் பற்றிய ஒரு கருத்தாக உருவாகியிருக்க முடியும். ஆனால் துரதிர்ஷ்டமாக அவ்வாறானதொரு முயற்சியை இலங்கை முன்னெடுத்திருக்கவில்லை.

1946-60களின் அபிவிருத்தி அனுபவம், குறிப்பாக 1940களில் பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களின் விளைவாக, முந்தைய நூறு ஆண்டுகளிலிருந்து அடிப்படையில் வேறுபட்டது. இருப்பினும், 1960களில் பொருளாதார வளர்ச்சிக்கான சூழல் 1950களில் இருந்ததை விட ஓரளவுக்கு வேறுபட்டது. இறுக்கமான இறக்குமதி கட்டுப்பாடு இலங்கையின் பொருளாதாரத்தின் நிரந்தர அம்சமாக மாறிவிட்டது என்று நம்புவதற்குக் காரணம் உள்ளது. 1961இல் ஆரம்பத்தில் கடினப்படுத்தப்பட்டதிலிருந்து பரிமாற்றக் கட்டுப்பாடு மற்றும் இறக்குமதி கட்டுப்பாடு இரண்டும் படிப்படியாக இறுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, 1962இல், தனிநபர் உரிமத்திற்கு உட்பட்ட மொத்த இறக்குமதிகளின் சதவீதம் 1961 இறக்குமதி மசோதாவில் 17 சதவீதத்திலிருந்து 48 சதவீதமாக உயர்த்தப்பட்டது. 1963 இறுதியில் பாதுகாப்பு 60 சதவீதமாக நீட்டிக்கப்பட்டது. இந்தக் கட்டுப்பாடுகள் வரும் ஆண்டுகளில் ஓரளவு தளர்த்தப்பட்டாலும், ஒரு நூற்றாண்டுக்கும் மேலான நவீன பொருளாதார வளர்ச்சியின் போது இலங்கை அனுபவித்த இறக்குமதிகளின் இலவச ஓட்டங்களுக்கு எதிர்காலத்தில் மீண்டும் ஒருபோதும் வாய்ப்பில்லை என்றே கருதப்பட்டது. ஏனெனில், கட்டற்ற இறக்குமதி நாட்டின் பொருளாதாரத்திற்கு விளைவித்த சேதம் அத்தனையது. ஆனாலும், இலங்கை அதே தவறை 1977இல் மீண்டும் இழைத்தது என்பது வேறுகதை. அதைப் பின்பு பார்க்கலாம்.

இலங்கையின் அதிகரித்து வரும் மக்கள்தொகை, ஏற்றுமதி உற்பத்தியில் ஏற்படும் மெதுவான அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதி விலைகளின் சாதகமற்ற போக்கு ஆகியவற்றுடன் இணைந்து, தீவின் மக்கள்தொகையின் அனைத்து இறக்குமதித் தேவைகளையும் பூர்த்தி செய்யத் தோட்ட விவசாயம் மீண்டும் ஒருபோதும் போதுமான ஏற்றுமதி வருமானத்தை உருவாக்கும் என்பது மிகவும் சாத்தியமற்றது. எப்படியிருந்தாலும், மற்றொரு ஏற்றுமதி ஏற்றத்தின் அடிப்படையில் சிந்திப்பது கற்பனையில் ஈடுபடுவதாகும்.

இக்காலப்பகுதியில் இலங்கையின் அனைத்து முக்கிய பாரம்பரிய ஏற்றுமதிகளுக்கும் கணிக்கப்பட்ட உலக விலை கீழ்நோக்கியே இருந்தன. இலங்கைக்குள் இறக்குமதிகள் வருவதைக் காலவரையின்றி இறுக்கமாகக் கட்டுப்படுத்துவது அவசியமாக இருந்தது. கடுமையான இறக்குமதி கட்டுப்பாட்டின் இந்த சாத்தியமான தொடர்ச்சியே 1960களை 1950களில் இருந்து வேறுபடுத்திக் காட்டியது. இறக்குமதி கட்டுப்பாடுகள் இலங்கைக்குள் நுகர்வு மற்றும் உற்பத்தியில் விளைவுகளை ஏற்படுத்தின.

நுகர்வுப் பக்கத்தில், கட்டுப்பாடுகள் இலங்கையின் குடிமக்களை, குறிப்பாக நடுத்தர மற்றும் உயர் வருமானக் குழுக்களை, சர்வதேச வர்த்தகம் மற்றும் உலகளாவிய உழைப்புப் பிரிவின் முக்கிய நன்மையாக நுகரப் பழகிய வெளிநாட்டுப் பொருட்களின் பரந்த அளவை தொடர்ந்து இழக்கச் செய்தன. உற்பத்திப் பக்கத்தில், இறக்குமதி கட்டுப்பாட்டின் முக்கிய விளைவு, தொழில்துறை மற்றும் விவசாய நுகர்வோர் பொருட்களுக்கான விற்பனையாளர் சந்தையை உருவாக்குவதன் மூலம் உற்பத்தி பல்வகைப்படுத்தல் ஊக்குவிக்கப்பட்டது. அதே நேரத்தில், மிகவும் கடுமையான அல்லது திறமையற்ற முறையில் நிர்வகிக்கப்படும் இறக்குமதி கட்டுப்பாடு, உற்பத்தியாளர் பொருட்களின் பற்றாக்குறையை உருவாக்குவதன் மூலம் உள்ளூர் உற்பத்திக்கான இந்த புதிய தேவையைப் பூர்த்தி செய்வதைக் கடினமாக்கின.

மொத்தமாக மீள்பயிர்ச்செய்கை செய்ய அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த போதிலும், தேயிலை தொழில்நுட்பத்தில் படிப்படியான முன்னேற்றங்கள் தொடர்ந்து திருப்திகரமான வேகத்தில் உற்பத்தியை அதிகரித்துள்ளன (1959-1963 காலப்பகுதியில், ஆண்டுக்கு நான்கு சதவீதத்திற்கும் மேலாக). இருப்பினும், சிறப்பாக நிர்வகிக்கப்பட்ட நிலங்களுக்கும் மோசமான நிலங்களுக்கும் இடையிலான விளைச்சல் இடைவெளிகள் மிகப் பெரியதாகவே இருந்தன, மேலும் உற்பத்தித்திறன் வளர்ச்சிக்கான இடம் தீர்ந்துவிடவில்லை. இருப்பினும், தேயிலை விலைகள் 1950களில் இருந்ததை விட பலவீனமாக இருந்தன. உலக நுகர்வில் முக்கிய வளர்ச்சி மத்திய கிழக்கில் உள்ளது, அங்கு குறைந்த தரமான தேயிலைக்கான தேவை தொடர்ச்சியாக இருந்தமை இலங்கைக்கு வாய்ப்பானது. இலங்கை தனது உற்பத்தியில் அதிகரித்து வரும் விகிதாச்சாரத்தை இந்த சந்தையில் விற்பனை செய்தால், இலங்கை ஏற்றுமதியில் அதிகரித்து வரும் பங்கு இருதரப்பு வர்த்தக ஏற்பாடுகளின் கீழ் வருவதால் ஏற்பட வாய்ப்பு இருந்தது. ஆனால் நிர்வாகக் குறைபாடுகள் இதன் வெற்றிகரமான செயற்பாட்டை இயலாததாக்கின.

இலங்கையின் பாரம்பரிய சிறப்புத் தன்மையான உயர்தர தேயிலைகளுக்கான தேவை, அதிக வருமானம் கொண்ட காமன்வெல்த் நாடுகளில் மையமாகக் கொண்டிருந்தது. ஆனால், இதில் ஒரு பெரிய ஆபத்தும் இருந்தது. இந்த நாடுகளில் சிலவற்றில், எடுத்துக்காட்டாக ஆஸ்திரேலியா, தேயிலையிலிருந்து கோப்பிக்கு மாறினால் ஏற்றுமதி சரிவடையும். சுருக்கமாக, தேயிலை 1950களில் இருந்ததைப் போலவே 1960களின் இறுதியிலும் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, இலங்கை தனது உயர்தரத் தேயிலைக்கான புதிய சந்தைகளைத் தேடவேண்டி இருந்தது. ஆனால் இலங்கை அதைச் செய்யத் தவறியது. இன்றி உலகின் தலையாய தேயிலை ஏற்றுமதியாளர் என்ற பெயரை இலங்கை இழந்துள்ளது. இன்று 'சிலோன் டீ' ஒரு புராதன நினைவாக மட்டுமே நிலைப்பது துயரம்.

1960களில் இலங்கை இறப்பர் ஒரு புதிராக மாறியுள்ளது. உற்சாகமான மற்றும் பரவலான மீள் பயிர்ச் செய்கை இருந்தபோதிலும், உற்பத்தி ஒப்பீட்டளவில் மெதுவாக வளர்ந்துள்ளது. நீண்ட கால விலைச் சரிவு எதிர்பார்க்கப்பட்டதால், தொழில்துறை செயல்திறன் அதிகரிக்க வேண்டிய தேவை இருந்தது. விலை சரிவுகளை ஈடுசெய்யும் அளவுக்கு விரைவாக உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மிகவும் திறமையான உற்பத்தியாளர்கள் மட்டுமே ஏற்றுமதி வருமானங்களை விரிவுபடுத்தவோ அல்லது பராமரிக்கவோ முடியும்.

எனவே, இலங்கை ஏற்றுமதிக்கான ஒட்டுமொத்த வாய்ப்பு பிரகாசமாக இல்லை. எந்த சிறு ஏற்றுமதி பொருட்களும் கணிசமான வளர்ச்சிக்கான நிலையில் இருக்கவில்லை, எனவே மொத்த ஏற்றுமதி வாய்ப்பு மூன்று முக்கிய பயிர்களின் நிலையைப் பெரிதும் சார்ந்துள்ளது. அவற்றின் வாய்ப்புகளின் சுருக்கம், தேயிலை தொடர்ந்து திருப்திகரமாக செயல்பட்டால் மற்றும் இறப்பர் உற்பத்தி அதிகரித்தால் மட்டுமே மொத்த ஏற்றுமதி வருமானம் வரும் ஆண்டுகளில் கணிசமாக உயர வாய்ப்பிருந்தது. மொத்த ஏற்றுமதி வருமானம் ஆண்டுக்கு இரண்டு சதவீதத்திற்கும் சற்று அதிகமாக உயர்ந்த 1950களின் அனுபவத்தின் மறுநிகழ்வு, ஒருவேளை எதிர்பார்க்கக்கூடிய சிறந்ததாக இருக்கலாம்.

உள்நாட்டு நுகர்வுக்கான விவசாய உற்பத்தியில் ஏற்கனவே நல்ல பலன் கிடைத்திருந்தது. 1950களில் ஏற்பட்ட நெல் உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான உயர்வுகள், வழங்கப்பட்ட விலை ஊக்கத்தொகையின் ஒரு பிரதிபலிப்பாகும், இது அதிகரித்த உரப் பயன்பாடு மூலம் ஆனால் நுட்பத்தில் சிறிய மாற்றங்களுடன் செய்யப்பட்டது. எனவே 1960களில் அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்மையில் மிக அதிகம். ஜப்பானிய முறை, நில சீர்திருத்தம், பயிர்க்காப்பீடு மற்றும் அரசாங்க திட்டத்தின் பிற அம்சங்களின் உற்பத்தியில் ஏற்படக்கூடிய விளைவுகள் கணிசமானவை என்பதை யாரும் சந்தேகிக்க முடியாது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1950களின் இறுதிவரை, சராசரி நெல் விளைச்சல் ஏக்கருக்கு தோராயமாக 25 புஷல்களில் இருந்து 35க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இது ஒரு ஈர்க்கக்கூடிய லாபமாகும், ஆனால் ஜப்பானில் சராசரி விளைச்சலுடன் ஒப்பிடுகையில், ஒரு ஏக்கருக்கு அண்ணளவாக 100 புஷல், நெல் உற்பத்தியை மேலும் தீவிரப்படுத்துவதற்கான வாய்ப்புள்ளது என்பது தெளிவாகியது. இலங்கையில் ஒரு ஏக்கருக்கு சராசரியாக 100 புஷல் மகசூல் என்பது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க ஏராளமான தொழில்நுட்ப பரிசீலனைகள் தேவைப்பட்டன. இருந்தபோதிலும், மேம்படுத்தப்பட்ட பயிர்ச்செய்கை முறைகள் விளைச்சலை இன்னும் அதிகரிக்கும்; என்பதைத் தெளிவுபடுத்தின.

ஆனால், 1964 இறுதியில், தென்கிழக்கு ஆசியாவில் அரசியல் ஸ்திரமின்மை எதிர்பார்த்ததை விட அதிக அளவில் விலைகளை வைத்திருந்த போதிலும், இலங்கையின் உற்பத்தி தேக்கமடைந்தது, மேலும் உலக சந்தையின் மந்தமான நிலை குறித்து தொழில்துறையிலிருந்து குறைகள் சொல்லப்பட்டன. அறுபதுகளின் குறைந்த விலையில் கூட, பெரிய உற்பத்தி அதிகரிப்பு இலாபகரமானதாக மாறும் அளவுக்கு மீள்பயிர்ச்செய்கைத் திட்டம் ஏன் செலவுகளைக் குறைக்கவில்லை என்பது தெளிவாகத் தெரியவில்லை. தேங்காய்த் தொழிலின் நிலை எல்லாவற்றிலும் மிகக் குறைவான நம்பிக்கைக்குரியதாக இருந்தது. இந்தத் தொழில் தொடர்ந்து அதிக அளவு வயதான மரங்களைக் கொண்டுள்ளது, மீள்பயிர்ச்செய்கை மிகவும் மெதுவாக நடந்து வருவதால், சூழ்நிலையில் எந்த பெரிய மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. உள்நாட்டு நுகர்வு தொடர்ந்து உயர்ந்து, ஏற்றுமதி செய்யக்கூடிய உபரியைக் குறைத்து வருகிறது. கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெய்க்கான உலக விலைகள் குறைந்தன. மொத்தத்தில், எதிர்காலத்தில் தேங்காய் பொருட்கள் இலங்கையின் ஏற்றுமதி வருவாயில் படிப்படியாக சிறிய பங்கை வழங்கும் என்பது தவிர்க்க முடியாததாகத் தெரிந்தது.

Rush Lanka Group உடன்

# SLT-MOBITEL கைகோர்ப்பு




SLT-MOBITELஇனால் Rush Lanka Group உடன் மூலோபாய பங்காண்மை கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதனூடாக, கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நிர்மாகணிக்கப்படும் சொகுசு தொடர்மனைத் திட்டங்களில் SLT-MOBITEL ஃபைபர் இணைப்பு தீர்வுகளை பெற்றுக் கொடுத்து, சகல வதிவோரின் டிஜிட்டல் அனுபவத்தை மேம்படுத்துவதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த உடன்படிக்கையில் SLTஇன் நுகர்வோர் வணிக பிரிவின் பிரதம வணிக அதிகாரி இமந்த விஜேகோன் மற்றும் Rush Lanka Group இன் நிர்மாணப் பணிப்பாளர் சயிட் ஆரிப் ஆகியோர் கைச்சாத்திட்டனர். இந்நிகழ்வில், இரு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இந்தப் பங்காண்மையின் கீழ், Rush Lanka developments இன் ஐந்து நிர்மாணத்திட்டங்களான கல்கிசையிலுள்ள Street Rush Residencies, Rush Court 4, தெஹிவளையிலுள்ள Rush Tower 2, Rush Metropolis மற்றும் கொழும்பு 14 இலுள்ள Rush Court 5 ஆகியவற்றுக்கான பிரத்தியேக டிஜிட்டல் சேவை வழங்குனராக SLT-MOBITEL இயங்கும். கைகோர்ப்பினூடாக, வதிவோருக்கு உயர் ஃபைபர் இணைப்பு வேகங்களை அனுபவிக்க முடியும் என்பதுடன், நவீன ஸ்மார்ட் இல்லங்களில் ஒப்பற்ற டிஜிட்டல் அனுபவங்களைப் பெறக்கூடியதாக இருக்கும். Rush Lanka Group உடனான பங்காண்மையானது, அல்ட்ரா வேக, தங்கியிருக்கக்கூடிய இணைப்புத் தீர்வுகளை வதிவிட அபிவிருத்தித் திட்டங்களுக்கு பெற்றுக் கொடுக்கும் SLT-MOBITEL இன் அர்ப்பணிப்புடன் பொருந்துவதாக அமைந்துள்ளது. சொகுசான தொடர்மனைகளுக்கு பிரத்தியேகமான ஃபைபர் இணைப்பை பெற்றுக் கொடுப்பதனூடாக, SLT-MOBITEL இனால் வசிப்போருக்கு உலகத் தரம் வாய்ந்த டிஜிட்டல் சேவைகளை பெற்றுக் கொள்ளும் வசதி வழங்கப்படுவதுடன், Rush Lanka Group இனால் உறுதியளிக்கப்படும் வாழிட அனுபவ உறுதி மொழியை நிறைவேற்றுவதாகவும் அமைந்திருக்கும்.

உயர் ஃபைபர் தொழினுட்பத்தினூடாக வலுவூட்டப்பட்டுள்ள SLT-MOBITEL வலையமைப்பினால், வதிவிடங்களுக்கு ஒபற்ற வினைத்திறன் வாய்ந்த டிஜிட்டல் செயற்பாட்டு அனுபவங்கள் சேர்க்கப்படும். SLT-MOBITEL Fibre backbone இனால் தடங்கலில்லாத அனுபவங்கள் சேர்க்கப்படும். இதில் வதிவோருக்கு ஒன்லைன் கேமிங், மெய்நிகர் வகுப்புகளில் பங்கேற்றல், வெளியிடங்களிலிருந்து பணியாற்றல் அல்லது high-definition விநோத அம்சங்களை ஸ்ட்ரீம் செய்தல் போன்ற அனைத்தும் அடங்கியிருக்கும். SLT-MOBITEL Fibre இனால் சகல தொடர்மனை பாவனையாளர்களின் வாழ்க்கை முறைகளும் மாற்றியமைக்கப்படுவதுடன், பெருமளவு சௌகரியம் மற்றும் உயர்மட்ட வாழ்க்கைத் தரம் ஆகியன சேர்க்கப்படும்.

கொமர்ஷல் வங்கிக்கு

# ‘சிறந்த எல்லை தாண்டிய சேவைக்கான – LMM’ விருது

கொமர்ஷல் வங்கி, கொழும்பில் நடைபெற்ற விசா தலைமைத்துவ மாநாட்டின் போது இடம்பெற்ற விசா வணிக தீர்வுகள் சிறப்பு விருதுகள் 2025இல், ‘சிறந்த எல்லை தாண்டிய சேவை - பெரிய மற்றும் நடுத்தர சந்தை’ விருதைப் பெற்றுள்ளது.

இந்த வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு, இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் சக்தியுடன் வர்த்தகங்களை செயல்படுத்தும் விசாவின் வணிக கொடுப்பனவு சுற்றுச்சூழல் முறைமையில் சிறந்த செயல்திறனை அங்கீகரிக்கிறது. உலகளாவிய ரீதியில் இலங்கையிலுள்ள நிறுவனங்கள் தடையின்றி மற்றும் பாதுகாப்பாக பரிவர்த்தனை செய்ய உதவுவதில் வங்கியின் தலைமைத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில், எல்லை தாண்டிய ரீதியில் சிறந்து விளங்குவதற்கான சிறப்பு விருதை கொமர்ஷல் வங்கி பெற்றுள்ளது.

கொமர்ஷல் வங்கியானது கடந்த ஒரு வருடமாக, தனது வர்த்தக நுகர்வோருக்கு நிகழ்நேர FX தெரிவுநிலை, மாறும் செலவுக் கட்டுப்பாடுகள் மற்றும் தானியங்கி நல்லிணக்கத்தை வழங்கும் மேம்படுத்தப்பட்ட வணிக அட்டை தீர்வுகளின் வெளியீட்டை துரிதப்படுத்தியுள்ளது. இந்த அம்சங்கள் பெரிய மற்றும் நடுத்தர சந்தை வாடிக்கையாளர்களிடையே வெளிச்செல்லும் மற்றும் உள்வரும் விசா பரிவர்த்தனைகளில் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தூண்டியுள்ள அதேவேளை பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவத்தில் வங்கியின் கடுமையான தரநிலைகளை வலுப்படுத்துகின்றன.

இந்த விருதை ஏற்றுக்கொண்ட கொமர்ஷல் வங்கியின் தனிநபர் வங்கி மற்றும் சில்லறை வங்கிச்சேவைகள் தயாரிப்புகள் பிரிவு உதவி பொது முகாமையாளரான கபில லியனகே கூறியதாவது: ‘இந்த அங்கீகாரமானது இலங்கையின் பெரிய மற்றும் நடுத்தர சந்தை வாடிக்கையாளர்களை அதிநவீன, எல்லை தாண்டிய கட்டணத் திறன்களுடன் மேம்படுத்துவதற்கான எமது உத்தியின் வெற்றியை வெளிப்படுத்துவதாகவுள்ளது. விசாவின் உலகளாவிய வலையமைப்பை எமது சொந்த வலுவான டிஜிட்டல் உள்கட்டமைப்போடு இணைப்பதன் மூலம், வர்த்தக செயற்பாடுகள் எல்லைகளைத் தாண்டிய ரீதியில் நம்பிக்கையுடன் செயல்பட உதவுவதுடன் அவர்களின் வளர்ச்சிக்கும், பிரதானமாக, நாட்டின் பொருளாதார அபிலாஷைகளைக்கும் எமது ஆதரவினை வழங்குகிறோம். இந்த கௌரவத்திற்காக விசாவிற்கும், எமது வாடிக்கையாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கைக்கும் நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.’

விசாவின் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான வதிவிட முகாமையாளர் அவந்தி கொலம்பகே விருது பெற்ற வங்கியை பாராட்டி பேசுகையில், ‘கொமர்ஷல் வங்கியின் புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தலுக்கான அர்ப்பணிப்பானது, விசா வணிக தீர்வுகள் சிறப்பு விருதுகள் எதற்காக வழங்கப்படுகின்றன என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். எல்லை தாண்டிய முக்கியத்துவத்தில் அவர்களின் வெற்றியானது, மூலோபாய பங்குடைமைகளும் தொழில்நுட்பமும் இலங்கை வர்த்தகங்களுக்கு புதிய வாய்ப்புகளை எவ்வாறு வழங்க முடியும் என்பதை நிரூபிக்கிறது. நாட்டில் உள்ள பெரிய மற்றும் சிறிய வர்த்தகங்களுக்கான கட்டணங்களை டிஜிட்டல் மயமாக்கும் எமது பகிரப்பட்ட தொலைநோக்குப் பார்வையுடன் கொமர்ஷல் வங்கியுடனான இந்த பங்குடைமையை தொடர்ந்து வலுப்படுத்துவதில் விசா மகிழ்ச்சியடைகிறது’ என்று குறிப்பிட்டார்.



# தீராக் காதல்

என்னவனே..!
எனக்காகவே பிறந்தவனே..!
சிறு புன்னகையில் சிறை பிடித்தவனே..!
மௌனமாய் பல கதைகள் சொல்பவனே..!
கை பிடித்து உடன் நடப்பவனே..!
நீ என் இதயத்தில் குடி கொண்டு
எட்டரை வருடங்களாகி விட்டன...
ஒரு துளியும் குறையாத
தீராக்காதல் இன்றும்...

என் நிழலாய் இணைந்திருப்பவனே..!
நான் தோள்கள் சாய்ந்து துயர் மறக்க,
உன் மென்மையான மார்பில்
சாய்ந்து அமைதி பெற
நீ தலை கோரி கொடுக்கின்ற
பரிசுத்தமான நெற்றி முத்தத்திலே
பிறந்த வீட்டின் பிரிவின் வலி
ஒரு துளியும் வந்ததில்லை...

என் எண்ணங்களும்
ஏற்ற தன்னை தானே
சிற்பமாய் செதுக்கியவனே..!
கோபத்தில் நான் சீறினாலும்,
பொறுமையாய் என் மனதை ஆளும்
என் தலைவனே..!
ஆண் என்ற ஆணவத்தில்
தன்னை நம்பி வந்தவளை
கொடுமைப்படுத்தும் ஆண்களுக்கு மத்தியில்,
மழலையாய் நான் அழ மடியில்
நீ தாங்கி காதல் செய்யும்
உன் பெயர் போதும்
என் கவிதைகள் உயிர் பெற...

நான் பெற்றெடுத்ததில்லையே
அன்னை போல ஆனாலும் தாயாய்
என்னை அரவனைப்பவனே..!
கணவன் நீ மட்டுமல்ல,
காதலித்தவனும் நீயே..!
நீ ‘அம்மாய்’ என்றழைக்கும்
செல்லப்பெயருக்கு
என்ன தவம் செய்தேனோ
நீ என் வாழ்வில் கிடைக்க...
நம் முற்றுப் பெறாத தீராக்காதலுக்கு
ஏழேழு ஜென்மத்திற்கும்
உனக்காகவே
பிரியாத வரம் வேண்டி
மறுஜென்மம் எடுப்பேன்..!

மது வர்மன் -இத்தாலி



# பெற்றோர்

பேரொளிகொண்டு - உலகைச்
சீராகநடாத்தும்
பெரியோன் ஒருவன் - என்னைப்
பெறக் கருதி
அரிய அண்டத்தில்
அம்மா அப்பாவாக
உதித்தான் போலும்
உலகம் போற்ற.

கண்கள் திறக்கும் முன்
கால்கள் நடக்கும் முன்
காணாதஉலகெலாம்
காட்டிக் களித்து
அவனின்றிஅசையாஉலகில்
அவர்களின்றியும் அசையும்
வித்தைகற்பித்த
வித்தகர்கள் பெற்றவர்கள்...

தீயின்மீதுநடக்கையில் - அதைப்
பூவாக்கிப் பூத்தனர்.
முள்ளின்மீதுநடக்கையில் - தம்மைப்
பாயாக்கிவிரித்தனர்.
கள்ளங்கபடம் அற்றவற்றைக்
கற்பித்துச் சிரித்தனர்.
பிறவிப் பெருங்கடலும் தீரும் - என்
பெற்றோர் கடன் என்றும் தீரா...

மருதூரினி பொன்னுத்துரை.



# அழிவு

தமிழரின் பகுதி எங்கும்
தாய்க்குலம் அழிந்து போகும்
நிலமையைப் பார்க்கும் போதில்
நித்தமும் வலிதான் மனதில்

நீரிலே மூழ்கிச் செல்வோர்
நெருப்பிலே எரிந்து கொல்வோர்
நேரிலே விபத்தில் மாள்வோர்
நெறிமுறை தவறிச் சாவோர்
ஓரிரு முடிச்சில் தொங்கி
உயிரினை மாய்ப்போர் எல்லாம்
பாருங்கள் அதிக மானோர்
பாவைகள் தானே இவர்கள்

மந்தைகள் போன்று எண்ணி
மனிதனைக் கொன்று தின்னும்
சிந்தனை மாறி நம்முள்
சீரழி கின்ற தின்று.

பந்தயக் களத்தில் வைக்கும்
பலிப் பொருள் போன்றுயிரைத்
தன் தந்திரச் செயலால் அழைத்துத்
தனிமையில் கொல்கின் றார்கள்

சந்தையில் வாங்கிச் செல்லும்
சதையுள்ள ஆட்டுத் தலைபோல்
விந்தையாய் வெட்டித் தலையை
வீதியில் கொண்டு செல்ல
முந்திய காலம் என்றால்
முடியுமா எமக்கு ஊரில்?
அந்திமக் கிரியை முன்பே
அவரெங்கோ இருப்பார் அறியோம்.

சினிமாவில் காணும் காட்சி
சிலநாளாய் இதுதான் நீட்சி
அனியாயம் உயிரோ போச்சி
அடடா இவ்வினத்திற் கென்ன ஆச்சி?

போருக்குள் மிஞ்சி வாழும்
புலம்பெயர்ந் தோர்போக வாழும்
ஊரினைக் காத்து நிற்கும்
உறவெல்லாம் அழிந்து போனால்
வேருக்கே ஆபத் தாகும்
விளங்கினால் சரிதான் நன்று.

நீலையூர் சுதா



# ‘கோடி அற்புதர்’ புனித அந்தோனியாரின் பெருவிழா

நன்றி: அ.மேரி சுனித்தா





ஜூன் 13ஆம் திகதியாகிய இன்று, ‘கோடி அற்புதர்’ என கொண்டாடப்படும் புனித அந்தோனியாரின் திருவிழாவாகும். கண்டி, கொச்சிக்கடை, பாசையூர், மானிப்பாய் போன்ற பிரபல்யமான அந்தோனியார் தேவாலயங்கள் உட்பட பெரும்பாலான அந்தோனியார் தேவாலயங்கள் இன்று புனித அந்தோனியாரின் திருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுகின்றன.

1231ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 13ஆம் திகதி, இறுதி திருவருட்சாதனங்களைப் பெற்ற பின்னர், இறைவனில் இளைப்பாறிய தினத்தையே புனித அந்தோனியாரின் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

புனித அந்தோனியார் போர்த்துக்கல் நாட்டவர். 1195ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி லிஸ்பன் நகரில் பிறந்தார். அவரது பெற்றோர்கள் மார்டின், மேரி இவர்களுக்கு முன்றாவதாகப் பிறந்த குழந்தைக்கு பெர்டினாந்து என்று பெயரிட்டனர். சிறு வயதிலிருந்தே இறைப்பற்றில் திளைத்து வளர்ந்த பெர்டினாந்து, ஒருநாள் தேவாலயத்தில் உருக்கமாக செபித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று பயங்கர உருவத்தில் அலகை தோன்றியது. சிறுவன் அஞ்சி ஓடவில்லை. மனத்துணிவுடன், தான் முழந்தாளிலிருந்த சலவைக் கல்மேல் திருச்சிலுவை அடையாளத்தை வரைந்தான். பிசாசு வெகுண்டு ஓடியது. அந்தக் கல்லில் பதித்த திருச்சிலுவை அடையாளத்தை இன்றும் காணலாம்.

புனித அகுஸ்தின் துறவற சபையில் சேர்ந்த பெர்டிணாண்டு, 1219ஆம் ஆண்டில் 24 ஆம் வயதில் குருப்பட்டம் பெற்றார். 1221ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகி, பிரன்ஸிஸ்கன் சபையில் சேர்ந்தார். அப்போதுதான், அந்தோனி என்று தனது பெயரை மாற்றிக் கொண்டார்.

மறையுரையாற்றுவதில் புகழ்பெற்ற அந்தோனியார், உள்ளத்தை ஊடுருவும் ஆழ்ந்த கருத்துகளை மக்கள் மத்தியில் பிரசங்கித்தார். தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்புக்குப் பின்னரும் கடவுள் அளித்த கொடையினால் அனேக புதுமைகள் செய்தார். இதனால் ‘கோடி அற்புதர் புனித அந்தோனியார்’ என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். அந்தோனியார் குழந்தை இயேசுவைக் காட்சியில் கண்டு கையில் ஏந்தியதாகவும் ஆகவேதான் படங்களில் அவரது கையில் குழந்தை இயேசுவும் மற்றொரு கையில் திருமறை நூலை கையில் வைத்திருப்பதாகவும் காட்டப்படுகிறது.

கோடி அற்புதர்’, ‘பதுவை பதியர்’, ‘பிசாசுகளை நடு நடுங்கச் செய்பவர்’, ‘காணாமல் போனவற்றைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்’ போன்ற அடைமொழிகளும் புனித அந்தோனியாருக்கே சொந்தம்.

புனித அந்தோனியார் இறந்து 336 ஆண்டுகளுக்குப் பின்னர், அவருடைய கல்லறை தோண்டப்பட்டபோது, அவருடைய நாக்கு மட்டும் அழியாமல் இருந்தது. அந்த நாக்கு, இன்றும் புனிதத்துவம் கெடாது

> **புனித அந்தோனியார் திருத்தலம் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி, அனைத்து இன, மத மக்களின் நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் உரியதாகும். தம்மை அண்டி வந்தவர்களை, புனித அந்தோனியார் வெறுங்கையோடு அனுப்ப மாட்டார் என்ற நம்பிக்கை அனைத்து மக்களுக்கும் உண்டு**

பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த நாக்கின் ஒரு சிறு பகுதி, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்திலும் பக்தர்களின் வழிபாட்டுக்கு ஏற்றவாறு, பாதுகாக்கப்பட்டுள்ளது. கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் வந்து வழிப்படும் புனித திருத்தலமாகத் திகழ்கின்றது.

கொச்சிக்கடை புனித அந்தோனியாரின் திருத்தல வரலாறு குறித்து பல்வேறு ஆவணங்கள் காணப்படுகின்றன. போர்த்துக்கேயரால் இலங்கைக்குப் பரப்பப்பட்ட கத்தோலிக்க மதம், ஒல்லாந்தரின் வருகையோடு கத்தோலிக்க மதத்தை வழிபடுவதில் தடைகள் ஏற்படுத்தப்பட்டது.

இக்காலப்பகுதியில் தான் கொச்சினிலிருந்து அந்தோணி என்ற கத்தோலிக்க மத போதகர் கொழும்புக்கு வந்தார். எனினும் துன்புறுத்தல்கள் காரணமாக, அவர் வியாபாரி போல் மாறு வேடமிட்டு, பகலில் (இன்றைய மலிபன் தெரு) கடையில் மீன் விற்றார். இரவில் அவர் கத்தோலிக்கர்களை இனம் கண்டு வழிபாடுகளை நடத்தினார். சிறிதுகாலத்தில் இதை அறிந்த ஒல்லாந்தர்கள் அந்தோணியைத் தேடினர்.

மீனவ சமூகத்தினர் அதிகமாக வாழ்ந்த முஹுதுபொடவத்தை என்ற பகுதிக்கு அவர் வந்தபோது,



கடல் அரிப்பால் தாம் பாதிக்கப்படுவது பற்றி மீனவர்கள் அவரிடம் முறையிட்டனர். கடல் அரிப்பைத் தடுத்தால், டச்சு வீரர்களிடமிருந்து பாதுகாப்பதாகவும் அவர்கள் உறுதியளித்தனர்.

அந்தோ மணலில் ஒரு சிலுவையை நட்டு, மண்டியிட்டு மூன்று நாள்களாக உண்ணா நோன்பிருந்து பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, கடல் பின்வாங்கத் தொடங்கியது. அந்த இடம் தான், இன்றைய கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்திருக்கும் இடமாகும்.

அந்தோணியின் அதிசயத்தை அறிந்த டச்சு ஆளுநர் வில்லெம் மௌரிட்ஸ் ப்ரூய்னின்க் (1739 - 1742), அதிசயம் நிகழ்ந்த நிலத்தை அந்தோணிக்கு வழங்கினார். அங்கே அவர் சிறு கடையையும் சமய பணியையும் மேற்கொள்வதற்கு ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்டது.

அந்தோனி, ஆரம்பித்த சிறு கடை, ‘கடே’ என்று அழைக்கப்பட்டது. கொச்சினில் இருந்து வந்தவரின் கடை என்பதால் ‘கொச்சியாகே கடே’ என்பது காலப்போக்கில் ‘கொச்சிக்கடை’ என அழைக்கப்பட்டது. இந்த நிலம் அதிகாரப்பூர்வமாக டச்சு கிழக்கிந்திய கம்பனியால் ஜனவரி 20, 1790அன்று, தேவாலயத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. அந்தோணி இறந்தபோது அவரின் உடலும் இந்தத் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இன்று, நாம் காணும் புனித அந்தோனியாரின் சிறிய பீடம்தான், கடலரிப்பு அற்புதத்தின் போது மரச்சிலுவை நாட்டப்பட்ட இடமாகும். 1806ஆம் ஆண்டு அத்திவாரம் இடப்பட்டு 1834ஆம் ஆண்டு புதிய தேவாலயம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. அந்த ஆண்டைத்தான் ஆலயத்தின் தொடக்க நாளாக இன்றுவரை கணிக்கப்பட்டு வருகிறது.

புனித அந்தோனியார் திருத்தலம் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி, அனைத்து இன, மத மக்களின் நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் உரியதாகும். தம்மை அண்டி வந்தவர்களை, புனித அந்தோனியார் வெறுங்கையோடு அனுப்ப மாட்டார் என்ற நம்பிக்கை அனைத்து மக்களுக்கும் உண்டு.

மனநலம், உடல்நலம், குடும்ப நலம், நோய்கள், பல்வேறு உபாதைகள் மற்றும் இன்னோரன்ன தமது பிரச்சினைகளை அந்தோனியார் கோவிலில் மண்டியிட்டு மன்றாடினால் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையை இந்த திருத்தலம் மக்களுக்கு உணர்த்தி வருகிறது.

# உலகின் மாபெரும் கழிவுத்தொட்டி- கடல்



எஸ்.நயன கணேசன்

நிலம் வளமிழந்தற்கு யார் காரணம்?–
மனிதர்.
நீர் நாசமானதற்கு யார் காரணம்?–
மனிதர்.
காற்று மாசாவதற்கு யார் காரணம்? –
மனிதர்.
காடு அழிந்ததிற்கு யார் காரணம்?–
மனிதர்.
உயிரினங்களின் அழிவிற்கு யார் காரணம்?–
மனிதர்.
புவி வெப்பமாவதற்கு யார் காரணம்?–
மனிதர்.
காலநிலை மாற்றத்திற்கு யார் காரணம்?
– மனிதர்.
மொத்தத்தில், புவியின் சீரழிவிற்கு யார் காரணம்? மனிதரே.
(பக்கம்: 86)

சூழலியலாளர் நக்கீரனின் எண்ணக்கருக்களிலிருந்து...

அண்மையில் இயற்கையின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய, மிகவும் மகத்தான ஓர் அறிவியல் படைப்பொன்றினை படிக்கும் பாக்கியத்தினை பெற்றேன் என்றே அறிமுகம் செய்வேன் இயற்கை 24X7 என்ற நூலினை.

இன்று உலகம் இயற்கையின் பேரழிவுகளையும் பிரளயங்களையும் சந்திக்கின்ற இவ்வேளையில் மனிதம் எந்தளவு தூர நோக்குடனும் விஞ்ஞான ரீதியிலும் எவ்வளவு அவசரத்துடனும் செயற்படவேண்டுமென்பதை இவ் அறிவியல் ஆக்கம் எம்மை வலியுறுத்தி நிற்கின்றது.

நாம் இயற்கையில் பங்கு வகிக்கிறோமா அல்லது, பிரிந்திருக்கிறோமா? என சுய பரிசோதனை செய்து கொள்ளச்செய்கின்ற ஒரு மகத்தான ஆய்வு இந்நன்னூல்.

இப்புத்தகத்தோடு பயணிக்கையில் ஒவ்வொரு வாசகனும் பசுமையாய் வாழ வேண்டுமென ஓர்மம் கொள்வான். நெகிழியை தொடுதலே பாவம் என கருதுவான். பாசாங்கில்லாத மாசற்ற சூழல் பாதுகாப்பு முயற்சி மிக உண்ணதமானதென பெருமிதங்கொள்வான். மனிதனை நேர்மையான சமூக பிராணியாய் பரிணமிக்கச்செய்யும் ஓர் உன்னத படைப்பு. அதுவே நூலாசிரியரின் வெற்றி. அதனை இயற்கைக்கு கிடைத்த கொடை என்பேன் நான்.

இலகு தமிழில் எளிமையான தற்கால நகைச்சுவையுணர்வுடன் இயற்கையின் அவசியத்தினை மிக நேர்த்தியாக வாசகர்களுக்கு புரிய வைத்துள்ளார் நூலாசான் நக்கீரன்.

மானுடவியல் அறிஞர் லெவி ஸ்ட்ராஸ்யை மேற்கோள் காட்டி இவ்வாறு பதிவிடுகிறார். “உலகம் மனித இனம் இல்லாமல்தான் தோன்றியது. அது அழியும் போது மனிதகுலம் இருக்கப்போவதில்லை.” என்ற கூற்றுடன் உள்ளே சென்றால் மானுடம் செய்ய வேண்டிய மிக ஆழமான தேடலுடன் விபரித்துள்ளமை நக்கீரனின் சூழலியல் பணிக்கு மகுடம் சூட்டியுள்ளது.

என்னை மீண்டும் புதிதாய் பிறக்கச்செய்த அறிவியல் புத்தகம் இயற்கை 24X7 என்ற இப்பசுமைப்பனுவல்.

ஐம்பூதங்களையும் மனிதன் எவ்வாறு அழித்துக்கொண்டிருக்கிறான் அதனால் விளைந்த விளைவுகள் நேரப்போகின்ற ஆபத்துகளுக்கு கட்டியம் கூறி நிற்கின்றது 24X7.

கடல், காற்று, ஆறு மற்றும் நிலங்கள் மீதான மனிதனின் மோகம் சொல்லெனா அழிவுகளுக்கு முகம் கொடுத்து வருவதனை சான்றுகளுடன் விபரிக்கின்றது இந்நூல்.

அத்துடன், ஃபேஷன் (fashion) மற்றும் பேசனுக்காக (passion) ஆக செயற்படுகின்ற சூழலியலாளர்களை வகைப்படுத்தும் இப்புத்தகம் அதன் பின்னால் இருக்கக்கூடிய அரசியல் வணிக நோக்கங்களை ஆதாரபூர்வமாக பட்டியிலாடுகின்றார் பசுமை போராளி நக்கீரன்.

புவியின் உண்மையான ஆற்றல் கிடங்கு கடலே என்கிறது இயற்கை. கடலின் முக்கியத்துவத்தினை உணர்த்த இது ஓர் நிதர்சனமிக்க பதிவு.

கடல் வளக்கொள்ளை, மணல் கொள்ளை பற்றி நூலில் பகிரப்படும் தகவல்கள் அதிர்ச்சியளிக்கின்றன.

“துபாயின் கடல் நடுவே பேரீச்சை மர வடிவில் செயற்கையாக உருவாக்கப்பட்ட ‘பாம் ஐலண்ட்’ தீவை உருவாக்க ஆஸ்திரேலியாவில் இருந்து மணல் இறக்குமதி செய்யப்பட்டது. சிங்கப்பூருக்கு மணல் விற்பதற்காகவே இருபத்து நான்கு இந்தோனேசிய தீவுகள் முற்றிலும் அழிக்கப்பட்டன.”

உலக மணல் பயன்பாட்டில், பாதிச் சீனாவுக்குச் சொந்தம்.ஆண்டுக்கு நூறு கோடி டன் மணலைச் சீனா இறக்குமதி செயகின்றது. அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் போர் நிகழ்ந்தால், அதன் முதன்மைக் காரணிகளில் ஒன்றாக மணல் இருக்கும் என்று அரசியல் பொருளாதார நோக்கர்கள் தெரிவிக்கும் கருத்தும் கவனிக்கத்துக்குரியது.”

(பக்கம்: 52)

இயற்கையை பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனின் தலையாய பொறுப்புணர்ச்சி என்பதை இப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கங்களும் உணர்த்துகின்றது. இந்நூலின் ஒவ்வொரு சொற்களும் பக்கங்கள் அல்ல. அவை ஒவ்வொன்றும் விதைகள்.

அனைத்து பள்ளிகளிலும் இருக்க வேண்டிய மற்றும் கற்றுக்கொடுக்கப்படவேண்டிய வேண்டிய கட்டாய பாடப்புத்தகம்.

இந்தப் புத்தகம் கற்கத்தக்கது; கற்றபின் அதற்குத் தக நிற்கத் தக்கது.



அமெரிக்கா

ட்ரம்ப்– மஸ்க் மோதல்

# முடிவுக்கு வந்தது

## மஸ்க்கின் மன்னிப்பை ஏற்றார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் - எலான் மஸ்க் மோதல் உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறித்து தான் தெரிவித்த கருத்துக்களுக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக, எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பதிவில்,

“கடந்த வாரம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறித்து எனது சில பதிவுகள் அளவு மீறிச் சென்று விட்டன. அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, எலான் மஸ்க்கின் மன்னிப்பை ஏற்றுக்கொண்ட டிரம்ப், “அவர் மன்னிப்பு கேட்டது மிகவும் நல்ல விடயம்” என்று தெரிவித்தார்.



தென்னாபிரிக்கா

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட வேன்:

## 19 மாணவர்கள் மாயம்

தென் ஆபிரிக்காவின் கிழக்கு கேப் மாகாணத்தில், பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற மினி வேன் வெள்ளத்தில் சிக்குண்டதில், 19 சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர்.

மலைப்பாதையில் சென்று கொண்டிருந்த மினி வேனை அப்பகுதியில் கரைபுரண்டு வந்த திடீர் வெள்ளம் அடித்து சென்றது. இந்த வேனில் 22 மாணவர்கள் இருந்தநிலையில் 3 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.



வேனுடன் மாயமான 19 மாணவர்களைத் தேடும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், தென் ஆபிரிக்காவின் கிழக்கு கேப் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 49ஆக உயர்ந்துள்ளது.

தென்னாப்பிரிக்காவில் கடந்த சிலநாட்களாக அடைமழை பெய்து வருகிறது. இந்நிலையில், கிழக்கு மற்றும் மேற்கு கேப் மாகாணங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்து வருவதால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. சூரைக்காற்றுடன் கொட்டி வரும் மழை காரணமாக அங்குள்ள மின்கம்பங்கள், இராட்சத மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் அப்பகுதியில் இருந்த சுமார் 1 இலட்சம் வீடுகள் மின்சார விநியோகம் தடைப்பட்டு இருளில் மூழ்கியுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸ்

பிரான்ஸ் சிறுவர்களுக்கு

## சமூக வலைத்தளங்களை பயன்படுத்த தடை

பிரான்சில், வருகிற ஒரு சில மாதங்களில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், சிறுமிகள் சமூக வலைத்தளத்தில் கணக்கு ஆரம்பித்து பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படும் என அந்த நாட்டின் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

“பிரான்சில் சிறுவர்கள் அலைபேசியில் சமூக வலைத்தளம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. இதனால் சிறுவர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள். மேலும் சிறுவர்கள் வன்முறை செயல்களிலும் ஈடுபடுகிறார்கள். “சிறுவர்கள் நமது நாட்டின் மனித வளமாக இருக்கும் நிலையில், சமூக வலைத்தளம் மூலமாக அவர்கள் கெட்டுச் சீரழிவது கண்கூடாகத் தெரிகிறது. இந்த நிலையில், 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைத்தளம் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகத் தடை விதிக்கக்கோரி ஐரோப்ப ஒன்றியத்திடம் புகார் அளித்துள்ளேன் என்றார்.

இந்தியா

தீப்பற்றிய கப்பலுக்குள்

## உயிரைக் கொல்லும் இரசாயனங்கள் பதுக்கம்?

கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் அழிக்கல் துறைமுகம் அருகே வைத்து நடுக்கடலில் தீப்பற்றியெறிந்த கப்பலில் உள்ள 143 கொள்கலன்களில் மனித உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் இரசாயன பொருட்கள் உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் கடல் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து, கோழிக்கோடு வடகரா முதல் அரியூர் வரை கடற்கரை பகுதிகளில் வசிப்பவர்கள், மீனவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏதாவது பொருட்கள் சந்தேகத்திற்கு இடமான வகையில் கரை ஒதுங்கினாலோ அல்லது கடலில் மிதந்து கிடந்தாலோ, அவற்றைத் தொடக்கூடாது. அதுகுறித்து உடனடியாக கடல் எல்லை பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

கொழும்பிலிருந்து மும்பை நோக்கி சரக்கு கப்பல் கடலில் கடந்த 9ஆம் திகதி சென்று கொண்டிருந்தது. சிங்கப்பூர் கொடி ஏற்றப்பட்ட எம்.பி. வார்ன் ஹாய்-53 என்ற அந்த சரக்கு கப்பல், கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் அழிக்கல் துறைமுகம் அருகே நடுக்கடலில் சென்ற போது, திடீரென கப்பலிலிருந்த கொள்கலன்கள் தீப்பிடித்து எரிந்தது.

கப்பலிலிருந்த கொள்கலன்களில் 20 தொன் வெடிபொருட்கள், அபாயகரமான இரசாயனங்கள் இருந்ததால் வெடித்துச் சிதறின. இதனால் கப்பலிலிருந்து கரும்புகை கிளம்பியது.

தொடர்ந்து கப்பலின் நடுப் பகுதியில் தீ முற்றிலும் அணைக்கப்பட்டு உள்ளது. ஆனால், கப்பலின் முன் பகுதியிலும், பின் பகுதியிலும் தீ எரிந்து வருகிறது. தீயைக் கட்டுப்படுத்த 5 கப்பல்கள் உதவியுடன் கடல் எல்லை பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து போராடி வருகின்றனர். மேலும் தீயணைப்பு பணியைத் துரிதப்படுத்தப் பெங்களூருவிலிருந்து 2 கப்பல்கள், மும்பையிலிருந்து ஒரு கப்பல் உள்பட 4 கப்பல்கள் கொண்டு வரப்படவுள்ளது.

தீ விபத்து ஏற்பட்ட பகுதியிலிருந்து அலை காரணமாக சரக்கு கப்பல் கட்டுப்பாடு இன்றி நகர்ந்து செல்கிறது. இதைத் தடுக்க கடல் எல்லை பாதுகாப்புப் படையினர் முயற்சித்து வருகின்றனர்.

தீயை முழுமையாக அணைக்க முடியாவிட்டால் அமெரிக்கா, ஸ்பெயின், நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து சிறப்பு தீயணைப்பு நிபுணர்களை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இந்த கப்பலில் 1,754 கொள்கலன்கள் உள்ளன. இதில் 1,083 கொள்கலன்கள் கப்பலின் அடித்தட்டிலும், 671 கொள்கலன்கள் மேல் பகுதியிலும் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா

காற்று மண்டலத்தை

### கண்காணிக்கும் அதிகாரிகள்

கப்பல் விபத்தால் காற்று மண்டலம் மாசடைந்து உள்ளதா என்பதை மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

பையாம்பலம் பகுதியில் 2 இடங்களில் பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டு, வாயு மாசடைந்து உள்ளதா என மாதிரி சேகரிக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக சல்பர் டை ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு ஆகிய அளவு பரிசோதிக்கப்படுகிறது. கப்பலில் தீ எரிந்து கொண்டிருப்பதால், கடல் நீரில் மாசு ஏற்பட்டு உள்ளதா என்பதைக் கண்காணிக்கவும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர்.

இதனிடையே சரக்கு கப்பலில் தற்போது தீ கட்டுக்குள் வந்தபோதும் மீண்டும் கரும்புகை எழுந்த வண்ணம் உள்ளது. தீயைக் கட்டுப்படுத்திய நிலையில் விபத்து ஏற்பட்ட கப்பலை ஆழ்கடலுக்கு இழுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், கப்பலில் இருந்து 20க்கும் மேற்பட்ட கொள்கலன்கள் கடலில் மூழ்கியதாகத் தகவல் வெளியானதால் அங்கு சோதனை நடத்தப்பட்டு வருகிறது.



உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி:

# முன்னிலையில் அவுஸ்திரேலியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா முன்னிலையில் காணப்படுகிறது.

லோர்ட்ஸில் புதன்கிழமை (11) ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் தெம்பா பவுமா, அவுஸ்திரேலியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஆரம்பத்திலேயே உஸ்மான் கவாஜா, கமரன் கிறீனை ககிஸோ றபாடாவிடம் இழந்து தடுமாறியது. பின்னர் மர்னுஸ் லபுஷைனும், ஸ்டீவன் ஸ்மித்தும் ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் மார்கோ ஜன்சனிடம் லபுஷைன் வீழ்ந்தார். சிறிது நேரத்தில் அடுத்து வந்த ட்ரெவிஸ் ஹெட்டும் ஜன்சனிடம் வீழ்ந்தார்.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்த ஸ்டீவன் ஸ்மித் மற்றும் பியூ வெப்ஸ்டர் இணை சில அதிர்ஷ்டங்களுடன் இனிங்ஸை கட்டியெழுப்பியது. இந்நிலையில் 66 ஓட்டங்களுடன் ஏய்டன் மார்க்ரமிடம் ஸ்மித் வீழ்ந்தார். தொடர்ந்து வந்த அலெக்ஸ் காரியும் கேஷவ் மஹராஜ்ஜிடம் விழ, அணித்தலைவர் பற் கமின்ஸும் உடனேயே றபாடாவிடம் வீழ்ந்தார்.



இறுதியாக வெப்ஸ்டரும் 72 ஓட்டங்களுடன் றபாடாவிடம் வீழ்ந்ததோடு, நேதன் லையன் ஜன்சனிடம் விழவும், மிற்செல் ஸ்டார்க் றபாடாவிடம் விழவும் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 212 ஓட்டங்களையே அவுஸ்திரேலியா பெற்றது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்கா மிற்செல் ஸ்டார்க்கின் இனிங்ஸின் முதலாவது ஓவரிலேயே மார்க்ரமை இழந்தது. சிறிது நேரத்தில் றயான் றிக்கெல்டனையும் ஸ்டார்க்கிடம் இழந்தது.

பின்னர் வந்த வியான் முல்டரும் கமின்ஸிடம் வீழ்ந்ததோடு, ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் ஜொஷ் ஹேசில்வூட்டிடம் விழ முதல் நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 44 ஓட்டங்களையே பெற்று தென்னாபிரிக்கா தடுமாறுகிறது.

## பாணந்துறையில் உதைப்பந்தாட்டப் போட்டி

பாணந்துறை தொட்டவத்தை உதைப்பந்தாட்ட சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட உதைப்பாந்தப்போட்டி 4ஆவது முறையாக கடந்த 3 நாட்களாக பாணந்துறை தொட்டவத்தை அல் பஹ்ரியா முஸ்லிம் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் இரவு போட்டிகளாக நடைபெற்றன.

வெற்றி பெற்ற முதலாம், இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காவது என அணிகளுக்கு பண பரிசில்களும் வெற்றிக் கிண்ணம் கையளிக்கப்பட்டது.

இக் கால்பந்தாட்டப் போட்டிக்கு நாடளாவிய ரீதியில் இருந்து 50க்கும் மேற்பட்ட 7 பேர் கொண்ட கால்பந்தாட்ட அணிகள் பங்கு பற்றின இறுதித் தேர்வுக்கு 4 அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

மல்டிலக் பெயின்ட் கம்பெனி அனுசரனை வழங்கியது. அத்துடன் பாணந்துறை வாழ் வர்த்தகர்கள் நிறுவனங்களும் அனுசரனை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டி 10ஆம் திகதி நள்ளிரவு நடைபெற்று வெற்றிக் கிண்ணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

வெற்றிக் கிண்ணத்தை மல்டிலெக் கம்பெனியின் பாணந்துறை முகாமையாளர் மொஹம்மட் றிஹாஸ் மற்றும் றஸ்மி , இப்திகார், றியாஸ் றில்வான் மிஸ்வர், ஆகியோர்கள் இணைந்து பேருவளை ரியல் அணியின் தலைவர் மன்சூ விடம் கையளித்தனர்.

முதலாம் இடம் ஹஜ்ஜூப் பெருநாள் சாம்பியன் கிண்ணத்தையும் மற்றும் - மூன்று லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணப் பரிசிலையும் பேருவளை ரியல் உதைப்பந்தாட்ட அணி பெற்றுக் கொண்டது.

இரண்டாம் இடம் கிண்ணமும் இரண்டு இலட்ச ரூபாய் ஹட்டன் உதைப்பந்தாட்ட அணியினருக்கும்

மூன்றாம் இடம் ஒரு இலட்சம் ரூபாய் சிட் சட் அணியினர் பாணந்துறை வழங்கப்பட்டன. நான்காம் இட அணிக்கும் 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.







அத்துடன் சிறந்த வீரருக்கு பேருவளை உதைபந்தாட்ட அணி வீரருக்கு 25 ஆயிரம் ரூபாய்சிறந்த வீரர் மௌன்டன் துவிச்சக்கர வண்டி ஹட்டன் உதைபந்தாட்ட அணிக்காக வழங்கப்பட்டது.




புனித மரியாள் பழைய மாணவர்களின் கிரிக்கெட் விழா:

## 2020 அணி சம்பியனானது

எட்டியாந்தோட்டை புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலத்தின் பழைய மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற 2025ஆம் ஆண்டின் கிரிக்கெட் போட்டியில் 2020ஆம் ஆண்டு சாதாரண தர வகுப்பு அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 07, 08 மற்றும் 09ஆம் திகதிகளில் எட்டியாந்தோட்டை வின்சன்ட் பெரேரா மைதானத்தில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றது.

இந்த போட்டியில் ஒவ்வொரு வருடங்களின் சாதாரண தர வகுப்புகளை சேர்ந்த 33 அணிகள் பங்குபற்றின. இதில் இறுதிப் போட்டிக்கு 2020 மற்றும் 2004ஆம் ஆண்டு அணிகள் தெரிவாகியதுடன், இறுதிப் போட்டியில் வென்று 2020ஆம் ஆண்டு அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. இதேவேளை 2004ஆம் ஆண்டு அணி இரண்டாம் இடத்தையும், 1997ஆம் ஆண்டு அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

பழைய மாணவர்களின் ஒன்றுகூடலாக மூன்றாவது தடவையாகவும் நடைபெற்ற இந்த கிரிக்கெட் போட்டி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய பழைய மாணவர்கள், விளம்பரதாரர்கள் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் நன்றிகளை கூறிக்கொள்வதாக பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

மெராயா கிரிக்கெட் தொடர்:

## மிலேனியம் லெஜன்ட்ஸ் அணி சாம்பியன்

நுவரெலியா, மெராயா தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் கிரிகெட் தொடரில், 2000ஆம் ஆண்டு மாணவர்களை உள்ளடக்கிய மிலேனியம் லெஜன்ட்ஸ் அணி சாம்பியன் பட்டத்தை வென்று சாதனைப் படைத்தனர்.

லிந்துலை டீஆர்ஐ விளையாட்டு மைதானத்தில் இரண்டு நாட்கள் வெகு பிரமாண்டமாக இடம்பெற்ற இந்த போட்டித் தொடரில் 24 அணிகள் பங்குபற்றியிருந்தன.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டித் தொடரில் தமது அதீத திறமையை வெளிப்படுத்திய 2000ஆம் ஆண்டு மிலேனியம் லெஜன்ட்ஸ் மற்றும் 2016ஆம் ஆண்டு மாணவர்களை உள்ளடக்கிய ஏளப்எப் ஆர்மி அணிகள் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருந்தன.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய 2016 ஆம் ஆண்டு மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட 3 ஓவர்களில் 21 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

இந்நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய 2000 ஆம் ஆண்டு மாணவர்கள் 2 ஓவர்களில் 22 ஓட்டங்களை இலகுவாக பெற்று வெற்றி கிண்ணத்தை சுவீகரித்தனர்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 13, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.